# தேர்ச்சி- மூன்று :- அறநெறி வாழ்வைக் காட்டும் இறை கட்டளைகளைக் கடைப்பிடிப்பர்

15

## 3.2. இயற்கைச் செல்வங்களைப் பாதுகாப்போம்

**கீழ்க்கண்ட திருவிவிலிய வாசகத்தை வாசிப்போம்.**

**கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன், இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன........**

**(தொ.நூ. 1:28–31)**

- **மேற்கண்ட திருவிவிலியப் பகுதியை மீண்டும் வாசித்துத் தியானிப்போம்.**

  - இறைவன் மட்டுமே படைப்புகள் அனைத்திற்கும் செந்தமானவர்.
  - எல்லா படைப்புகளும் நல்லவையே.
  - மண்ணுலகில் வாழும் அனைவருக்கும் பொறுப்பும் கடமையும் நிறைந்த வாழ்க்கை முறையை இறைவன் தந்துள்ளார்.
  - உலகம் இயங்குவதற்குத் தேவையான நியமங்களை இறைவன் தந்துள்ளார்.

ஆகிய விடயங்களை இப்போது உணர்ந்திருப்பீர்.

- **மேற்கண்ட விவிலியப் பகுதியிலிருந்து விடைகளைத் தேடுவோம்.**

1. இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் இறைவனால் அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள், கடமைகள் இரண்டினை எழுதுக.

    1.

    2.

2. மேற்கண்ட விவிலியப் பகுதியின்படி படைப்புத் தொடர்பாக சிறுவர்களாகிய எமக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகள், கடமைகள் மூன்று எழுதுக.

    1.

    2.

    3.

**உமது கருத்துக்கள் கீழ் காணப்படும் கருத்துக்களுக்கு ஏற்ப அமைந்துள்ளனவா?**

படைப்புகள் அனைத்திற்கும் உரிமையாளராக இறைவன், இவ்வுலகில் வாழும் அனைவரையும் இயற்கைச் சட்டத்திற்கு உட்படுத்தும் முறை பற்றி மேற்கண்ட விவிலியப் பகுதியிலிருந்து அறிகிறோம்.

எனவே,

- இயற்கையோடு இணைந்து அதன் மூலம் ஊட்டம் பெறுவதற்கு
- இயற்கையைப் பாதுகாப்பதற்கு
- இயற்கை வளங்களால் பயனடைவதற்கு
- படைப்பின் அழகையும் அதன் இயங்கும் தன்மையையும் சமநிலையில் செயற்படுத்துவதற்கு

ஏற்ற பொறுப்புகள், கடமைகள் நிறைந்த வாழ்க்கை முறை இவ்வுலகில் வாழும் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது என்பது புலனாகின்றது.

**நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது: நான் உங்களுக்கு வழங்கும் நாட்டில் நீங்கள் வந்து சேரும்போது, நாடு ஆண்டவருக்கென்று ஓய்வு நாளைக் கொண்டாட வேண்டும். ஆறு ஆண்டுகள் வயலைப் பயிரிட்டுத் திராட்சைக் கொடிகளைக் கிளைநறுக்கி அவற்றின் பலனைச் சேர்ப்பாய். ஏழாம் ஆண்டு ஆண்டவருக்காக ஓய்ந்திருக்கும் ஆண்டு. நிலத்துக்கும் ஓய்வு வேண்டும். . . . அது நிலத்துக்கு ஓய்வு ஆண்டு. . . .**

**(லேவி. 25:2–7)**

- **மேற்கூறப்பட்ட விவிலியப் பகுதியில் காணப்படும் கருத்துக்களைக் கலந்துரையாடி அவற்றை சுருக்கமாக உமது பயிற்சி நூலில் எழுதவும்.**

இயற்கையின் இயங்கும் தன்மைக்கும் "ஓய்வு" அவசியம் என்பதற்காகவே, ஆறு ஆண்டுகளாக வயலைப் பயிரிட்டுத் திராட்சைக் கொடிகளை கிளைநறுக்கி, அவற்றின் பலனைச் சேர்க்க அனுமதியளித்த இறைவன் அப்பணிகளையெல்லாம் நிறுத்திவிட்டு, ஒரு வருடம் நாட்டிற்கு ஓய்வு கொடுக்க வேண்டும் எனப் பணித்தார்.

பயிர்ச்செய்கை முறையும் இவ்வாறே நடைபெறுகிறது. காட்டைச் சுத்தப்படுத்தி, ஒன்று அல்லது இரண்டு பருவ காலங்கள் பயிரிட்ட பின், அத்தோட்டத்தில் ஒன்றும் பயிரிடாமல் விட்டு, சில வருடங்களின் பின்னர் அதனை மீண்டும் சுத்தப்படுத்தி மழைக் காலம் வரும்போது சோளம், குரக்கன், தானியம், மிளகாய், காய்கறி வகைகள் பயிரிடுவதற்கும் நல்விளைச்சல் அறுவடை செய்வதற்கும் விவசாயிகள் ஆயத்தமாகுவர். அந்த பயிர் செய்யும் நிலத்திற்கு ஒரு வருடம் முழுவதும் கிடைக்கும் ஓய்வானது அந்நிலத்தை வளமான நிலமாகவும் நல்விளைச்சல் தரும் நிலமாகவும் மாற்றுகிறது.

உலகம் இயங்குவதற்காக தொடக்கத்திலிருந்தே இறைவன் நியமங்களை ஏற்படுத்தியுள்ளார்.


. . . கடவுள், "பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புள் தோன்றுக! அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்" என்றார். . . .

(தொ.நூ. 1:14–15)

எனவே இயற்கையின் இயங்கு தன்மைக்கேற்ப செயலாற்றுவது எமது பொறுப்பாக உள்ளது. அதற்கு எதிராக செயலாற்றுவதால் ஏற்படும் அதன் அழிவிற்கு நாமே காரணமாகின்றோம்.

## இயற்கையின் இயங்கு தன்மைக்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பங்கள்:

- மரங்களை வெட்டுதல்.
- ஆற்று நீரை அசுத்தப்படுத்தல்.
- ஆற்றுக்கு அண்மிய பகுதிகளில் தமது விருப்பத்திற்கேற்ப மண் எடுத்தல்.
- கடற்பவளம் போன்றவற்றை உடைத்து அழித்தல்.
- பொலித்தீன் பாவித்தல்.
- வளியை மாசடையச் செய்தல்.



**இயற்கையின் இயங்கு தன்மைக்கு எதிராக செயற்படுவதால் உண்டாகும் அழிவுகள்.**

* பெரு வெள்ளம்
* சுற்றாடல் மாசடைதல்
* எரிமலை வெடித்தல்
* நிலநடுக்கம்
* மண் சரிவு
* வறட்சி



உலகின் அழிவுகள் ஏற்படுகின்றபோதும் இறைவனின் விருப்பத்திற்கு மதிப்பளித்து நற்குணங்களுடன் நன்முறையில் வாழ்பவர்கள் மீட்புப் பெறுவார்கள் என்பதற்கு திருவிவிலியத்தில் நாம் காணும் நோவாவின் கதை ஓர் நல்ல உதாரணமாகும்.

- **தொடக்க நூல் 6:13-20ல் குறிப்பிடப்படும் நோவாவின் கதையை ஆசிரியரின் உதவியோடு வாசியுங்கள்.**
- **அக்கதையிலே உங்கள் உள்ளத்தைத் தொட்ட நிகழ்வுகள் இரண்டை வரைந்து காட்டுங்கள்.**

* இறைவனை மட்டுமே விசுவசித்து,
* இறைவன் படைப்புத் தொடர்பாக எமக்களித்த பொறுப்புகளை சரிவர நிறைவேற்றி,
* இயற்கையின் இயங்கும் தன்மைக்கேற்ப வாழ்ந்து,
* இயற்கையில் உள்ள இறைவனின் வியத்தகு திட்டத்தை உணர்ந்து,
* இயற்கையைப் பாதுகாக்க எம்மை அர்ப்பணித்து,

இயற்கைக்கேற்ப நம் வாழ்வை நல்வழியில் திட்டமிட்டுக்கொள்ள முடியும். இறைவனின் விருப்பத்தையும் இரக்கத்தையும் பெற முடியும். இயற்கையின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு இயற்கையிலுள்ள வியப்புமிகு திட்டங்களை உணர்ந்து கொள்ள முடியும்.

## விடையளிக்கவும்

- **கீழ்க்காண்பவை சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

1. இறைவனே படைப்புகள் அனைத்தினதும் உரிமையாளராவார். (.........)
2. இயற்கைக்கு மாறாக செயற்படுவது எமது கடமையாகும். (.........)
3. படைப்புகள் அனைத்தும் இயற்கைச் சட்டத்திற்கு உட்பட்டுள்ளன. (.........)
4. இயற்கை எம்மால் அழிக்கப்பட வேண்டுமென்பது இறைவனின் விருப்பமாகும். (.........)
5. நம் வாழ்வை நன்முறையில் ஒழுங்கு செய்வோம், திட்டமிடுவோம். (.........)

**என் வாழ்க்கைக்கு...**

நான் இயற்கைச் சட்டங்களுக்கு மதிப்பளித்து, அவற்றின் இயங்கு தன்மைக்கு ஒத்துழைப்பேன்.